O.S.No.43/2017

வா.சா.1, திரு.சீனிவாசன்
நாள் : 10.09.2024 நேரம் : 12.10 P.M.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

1) நான் வழக்கு தாக்கல் செய்திருப்பது சர்வே எண் 120/1 என்றால் சரிதான். அது புஞ்சை நிலமாகும். புஞ்சை நிலத்திற்கு வீட்டு வரி ரசீது கொடுப்பார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் சர்வே எண். 130/10 என்று உள்ளது என்று சொன்னால் சரிதான், இந்த ஆவணம் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 ஆவணத்தில் சர்வே எண் 120/1A இ.வேலு என்றும் சர்வே எண். 120/1B ஆண்டி மற்றும் மந்திரி பெயரில் உள்ளது என்றால் சரிதான், ஆண்டி மற்றும் மந்திரி எனது தாத்தா ஆவார்கள். வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணம் ஆண்டி மற்றும் மந்திரி பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2) சர்வே எண்.120/1 சர்வே எண் 120/1A மற்றும் 120/1B ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.12 சர்வே எண். 120/1B மற்றும் 133/10 ஆகியவற்றை குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.13 ஆவணத்தை கிராம நிர்வாக அலுவலர் வழங்குவதற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா,ஆ.13 ஆவணத்திலும் சர்வே சர்வே எண். 120/1B மற்றும் 133/10 தான் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.14 ஆவணம் 2021–2022 வருடத்திற்குரியது என்று சொன்னால் சரிதான்.

3) இது வழக்கிற்கு பின்னிட்டு ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 முதல் வா.சாஆ.14 ஆவணங்கள் நான் வழக்கிற்கு பின்னிட்டு வாங்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்பதால் சட்டப்படி சாட்சியங்களாக ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.14 ஆவணத்திலும் சர்வே எண். 120/1B என்று உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்திற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.25 P.M

சாட்சியின் கையொப்பம்.